1970 செப்டம்பர் 2] சாலேகள்

* 205 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பனேயப்பட்டி–கூடலூர் சாலேயை முடித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(இ) ஆமெனில், எப்போது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும், அரசின் பரிசீலனேயில் இல்லே.

(இ) இவ்வினு எழவில்லே.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலேவரவர்களே, திருமயம் ஒன்றியத்திலுள்ள பனேயப்பட்டி–கூடலூர் இடையே ஆற்றின் குறுக்கே பெரும் பாலம் அமைக்க வேண்டிய காரணத்தால், திருமயம் ஒன்றியத்திற்கு அரசு மான்யம் வழங்கி உதவ முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி : சாலேயைப்பற்றியது இது. பாலத்தைப் பற்றி கேட்கிருர். அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லே.

* 206 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில், பாலமேட்டுக்கும் வேம்பரளிக்கு மிடையில் சாலே அமைப்பதற்கான செயற்குறிப்பேதேனும் பரிசீலனேயிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பாலமேட்டிற்கும் வேம்பரளிக்கும் இடையே ஒரு சாலே அமைத்தலுக்கான கருத்து பரிசீலக்கப்பட்டு, இவ்வேலேயானது நிதி நிலேமை சீராகி தக்கசமயம் வரும் வரை பொறுத்திருக்க வேண்டியுள்ளது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : இச்சாலே ஏற்கனவே 1961-ம் ஆண்டில் 2 பர்லாங் தூரம் கட்டப்பட்டு நிறுத்தப்பட்டு இருக்கிறது. இச்சாலே 3 தாலூக்காக்களேயும், 4 தொகுதிகளேயும், இணேப்பதாக இருக்கிறது. அதாவது, திருப்பரங்குன்றம், சோழவந்தான், மேலூர் தெற்கு, மேலூர் வடக்கு தொகுதிகளே இணேப்பதாக இருக்கிறது. அழகர்கோவில் சாத்தியார் அணேக்கட்டு இவற்றை இணேக்கும் வகையில் சாலே போட, அரசு விசேஷ திட்டத்தில் இந்த திட்டத்தை இந்த ஆண்டு சேர்த்து அமைக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலேவரவர்களே, 1961-62 வரை பேருந்துகளால் அமைக்கப்பட்ட சாலேகளுக்கு மான்யம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பாதையை சீராக்க, செப்பனிட ஏறத் தாழ ஆகும் செலவு ரூ. 2.5 லட்சமாகும். இது, ஏனேய சாலேகள் என்ற திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். மாவட்ட